



அமரர்

# ஸ்ரீமதி நாராயணசர்மா தவமணிஅம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த


## நினைவு மலர்

**08.02.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

மலராய் நறுமணமாய்
நல்லெண்ணத்தின் செல்வமாய்
எல்லோருக்கும் வள்ளலாய்
கலங்கரை விளக்கமாய்
வளம் பெற்றே நீர். வாழ்ந்தீர்
வையகத்தில் உன் புகழின்
நிழலாக நாம் வாழ்ந்தோம்
நற்பெயரும் தந்தீர்
நலமுடனே நாம் வாழ
இப்போதும் உன் நினைவால்
இயம்புகின்றோம் இந்நூலை ஏற்றிடுவீர்
எந்நாளும் உம் நினைவால் நாம் வாழ..........

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.



அன்னை
மடியில்
29.08.1931

அம்பிகை
அடியில்
30.01.2017

அமரர்

# ஸ்ரீமதி நாராயணசர்மா தவமணிஅம்மா

அவர்கள்

## திதி வெண்பா

சீர்மேவும் துர்முகி வருடத் தைத்திங்கள்
பூர்வபக்ஷம் பூண்ட திருதியைத் திதி தன்னில்
பெருக்கடி சித்திவிநாயகரின் சிந்தனையுடன்
பார்நீத்துப் பொன்னுலகு சேர்ந்தார் தவமணிஅம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
 கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
 மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
 திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்(டு) உள்ளம்
 குளிர என் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
 நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
 பெற்றதார் பெறுவார் உலகில்?
ஊரும் உலகும் கழற உளறி
 உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
 பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# ஸ்ரீமதி நாராயணசர்மா தவமணிஅம்மா

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

தர்மத்துவீபமாம் இலங்காபுரியின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் தென்மேற்கேயுள்ள சப்த தீவுகளின் தலைத் தீவாம் நெடுந்தீவு கடல் வளமும் கனிவளமும் கொண்ட தயிர்த்தீவு தனிலே நடுக்குறிச்சி என்னும் கிராமத்திலே காலஞ்சென்ற குப்பாசாமி ஐயர் அன்னம்மா தம்பதியினரின் நல்லறம் என்னும் இல்லறத்தின் பயனாக காலஞ்சென்ற காசிலிங்க ஐயர் மற்றும் (கண்டி) இரத்தினக் குருக்களுடன் 1931 ஆம் ஆண்டு ஆவணி மாதம் அமரர் தவமணியம்மாவையும் பிள்ளைகளாகப் பெற்றனர். தவப்புதல்வியாம் தவமணி அம்மாவை தவம் என்னும் செல்லப்பெயரால் தன் உறவினர் களால் அழைக்கப்பட்டு வந்தார்.

பருவ வயதடைந்த வேளையிலே பருத்தித்துறை, துன்னை யம்பதியைச் சேர்ந்த சிவஸ்ரீ சதாசிவக் குருக்கள் தங்கம்மா தம்பதியினரின் ஏகபுத்திரனாம் பிரம்மஸ்ரீ நாராயண சர்மாவைத் திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தி பத்மநாபக் குருக்கள், சந்தானலெட்சுமி என்னும் செல்வங்களைப் பெற்றெடுத்து மகிழ்ந்தனர். பெருக்கடி சித்தி விநாயகராலயத்தில் பணிபுரிந்த இவர்கள் சிறிது காலம் செல்ல மயிலிட்டி என்னும் பதியிலே மாடிவீடு கட்டி மகிழ்ந்திருந்த நாளில் வரலெட்சுமி என்னும் செல்வத்தையும் பெற்றெடுத்து வாழ்ந்து வரும் நாளில் மயிலிட்டி முனையன்வளவு முருகன் ஆலயத்தில் பணிபுரிந்தனர். போர்க்காலச் சூழல் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புலோலிப்பதியிலே வீட மைத்து வாழ்ந்தனர். பருவவயதை அடைந்த தமது மக்கட் செல்வங்களை முறையே மூத்தபுதல்வன் பத்மநாதக்குருக்களை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ மகேஸ்வர ஐயர் சாரதாம்பாள் தம்பதியினரின் மூத்தபுதல்வியாம் மங்கை நல்லாள் மல்லிகாராணியைத் திருமணம் செய்து கொடுத்து, வைத்தீஸ்வரசர்மா சர்வேஸ்வர சர்மா என்னும் பேர மக்களையும் இரண்டாவது மகளான சற்குணவதியாம் சந்தான லெட்சுமியை கல்வியங்காடு, சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் பாக்கியலெட்சுமி அம்மா தம்பதியினரின் நற்குமாரனாம் சுகுமாரக்குருக்களுடன் இல்லற வாழ்வில் 1993 ஆம் ஆண்டு இணையவைத்ததன் பலனாக கானப்பிரியா, நித்தியானந்தி, குகப்பிரியன், சுபாசினி, கஜனிகா என்னும் பேரச் செல்வங்களையும், இளைய வதுவான வரலெட்சுமி என்னும் நங்கையை 1998 ஆம் ஆண்டு பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகராலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ மகேஸ்வர ஐயர், சாரதாம்பாள் தம்பதியினரின் ஏக புத்திரனாம் மாண்புமிகு மகேந்திரசர்மாவை மணம் முடித்து வைத்து லக்ஷ்மி நாராயணன், சஞ்சுதன் என்னும் பேரர்களு டனும் வாழ்ந்து வந்தார். வந்தாரை வரவேற்று இன்முகம் மாறாது ஆகாரம் கொடுத்து அன்புக்கதைகள் கூறி பார் போற்ற வாழ்ந்த காலத்தில் காலத்தின் கோலத்தால் தனது அன்புக் கணவரை 1998 ஆம் ஆண்டு இழந்து தனிமை என்னும் துயர் வாட்டத் தனது மூத்த மகளான சந்தானலெட்சுமியுடன் வாழ்ந்து வரும் நாளில் பாரிசவாதம் என்னும் நோயால் பீடிக்கப்பட்டார்.

2016 ஆம் ஆண்டு தனது தவப்புதல்வன் பத்மநாதக் குருக்களை காலனிடம் பறிகொடுத்துப் பரிதவித்தார். தனது இறுதிநேரத்தில் கூட தனது குலதெய்வங்களான பெருக்கடி விநாயகர், முனையன்வளவு முருகன் போன்ற தெய்வங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவாகவே இருந்து 2017 ஆம் ஆண்டு உத்தராயணத் தைத் திங்கள் 17 ஆம் நாள் (30.01.2017) திங்கட்கிழமை திருதியைத் திதியில் இறைவனடி சேர்ந்தார். பெற்றமகன் இல்லாத குறையைப் போக்கி பெறாமகன், யோ. நாகேஸ்வரசர்மா இறுதிக் கடமைகளைச் செய்து நிறைவேற்றி வைத்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பரம்பொருளைப் பிரார்த் திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்

**அறிவாளியுடன் ஒருமுறை உரையாடுவது**
**ஒரு திங்கள் நூல்களைப் படிப்பதைவிட**
**நன்மை தருவதாகும்.**

– டேவிற்க்யூம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பால் உயர்ந்த தவமணிஅம்மா

சப்த தீவுகளில் ஒன்றான நெடுந்தீவில் பிறந்து திருமண வாழ்வின் பின் மயிலிட்டியில் சொந்த வீடும் காணியும் கொண்டு வாழ்ந்து வந்தார். கணவர் பிள்ளைகள் எனக்களிப் புடன் வாழ்ந்தபோது நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரண மாக சொந்தமாக வாழ்ந்த மயிலிட்டியை விட்டு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. மயிலிட்டியில் வாழ்ந்த காலத்தில் இவருடைய வீட்டிற்கு வந்த எவரும் பசியுடன் திரும்பிப் போனதில்லை. எல்லோருக்கும் அன்புடன் தேநீர், உணவு கொடுப்பதில் தவமணி அம்மாவும், கணவர் நாராயண சர்மா அவர்களும் மிகவும் சிறந்து விளங்கினர். அவர்களுடைய இவ் விருந்தோம்பல் பண்பு இடம்பெயர்ந்து வாழ்ந்த இடங் களிலும் தொடர்ந்து வந்தது.

1998 ஆம் ஆண்டு தனது கணவரான நாராயணசர்மா இறை வனடி சேர்ந்ததும், தான் தனது பிள்ளைகளின் நலன்கருதி அவர்களுடன் வாழ்ந்து வந்தார். தான் வாழ்ந்த இடங்களில் எல்லாம் உற்றார் உறவினர்கள், அயலவர்கள் என எல்லோரி டமும் அன்புடன் பழகி அவர்களின் நன்மதிப் பினைப் பெற்றுக் கொண்டார். எந்த நேரமும் சுறுசுறுப்புடன் இயங்குவதில் மிகவும் விருப்பம் கொண்டவர். அவரின் நேசிக்கும் மனப்பாங் கினால் அவரின் பேரப்பிள்ளைகள் அவரை மிகவும் அன்புடன் "பாட்டி" என அழைத்துக் கொஞ்சி மகிழ்வர்.

எல்லோர் வாழ்விலும் நன்மையும் தீமையும் "சுழல் சக்கரம்" என்பதற்கு அமைய அவருடைய அருமைப் புத்திரன் பத்மநாதன் அவர்களின் திடீர் மறைவினால் மிகவும் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்திய நிலையில் தனது மூத்த மகளுடன் வாழ்ந்து வந்தார். எல்லாம் வல்ல இறைவன் அவருடைய மனவருத்தத்தினைப் போக்குவதற்காக, அவரை *30.01.2017* அன்று தன்னுடைய வானுலகம் அழைத்துக் கொண்டார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

**திருமதி விமலராஜா கடம்பமலர்**
**அதிபர்,**
**உடையார் லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

*உலகில் உயிரோடு வாழ்வதில் மட்டும் வாழ்க்கையில்லை உயரிய கொள்கை களுக்கா மடிவதிலும் உள்ளது.*

*-அல்பெயர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தமகள் புலம்பல்

சந்தானம் என்றழைத்தவுடன்
சாந்தமுடன் வந்திடுவேன்
தாய்நீர் சென்றுவிட்டீர்
தனியே என்னைத் தவிக்கவிட்டு.

உனது ஆசைகளை நிறைவேற்றினேன்
உன்னுடனே நானிருந்தேன்
அன்புடனே எமைப் பெற்றெடுத்தீர்
ஆசையாய் எமை வளர்த்தீர்.

கடைசிவரை என்னுடனே - நான்
கலங்காது உம்மைப் பார்த்தேன்
அண்ணன் அவன் சென்று விட்டான்
அங்கிருந்தே அவன் அழைத்தான்
ஐயாவிடம் சென்றுவிட்டீர்
எம்மை நீர் தவிக்கவிட்டு.

அம்மா! அம்மா! அம்மா!

மூத்தமகள்
சந்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையமகள் புலம்பல்

வரதி என்று பெயர் சூட்டி
வளமுடனே வாழவைத்தீர்
உங்களைப் பற்றி சொல்லுவதற்கு
வாய்களில் சொற்கள் தவழவில்லை.

அன்புடன் எமைப்பெற்று
சிறப்புடன் வாழவைத்தீர்
இல்லறம் சிறப்பதற்கு - எமக்கு
இனியவை எல்லாம் கூறினீரே.

செல்லமாய் எனை வளர்த்து
செங்கதிர் போல் வாழவைத்தீர்
காலன் அவன் காவு கொண்ட வேளையில்
அருகில் இல்லையே என்று ஏங்கினேன்....

அம்மா! அம்மா! அம்மா!

இளையமகள்
வரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் புலம்பல்

மாமி என்று அழைத்தவுடன்
மனங்கோனாது கதைப்பீரே
மகனை நீங்கள் பெற்றெடுத்து
மணக் கோலம் கண்டீரே.

மகன் அவன் அழைத்துவிட்டான்
மாமி நீங்கள் சென்றுவீட்டீர்கள்
பேரன் மார் தேடுகின்றனர்
பாட்டியைக் காணவில்லை என.

இரவினிலே வந்த செய்தி
இடிவிழுந்தாற்போல் கேட்டசெய்தி
கேட்டசெய்தி பொய்யாகாதா என்று
ஏங்குகின்றோம் நாமிங்கு......

மாமி! மாமி! மாமி!

மூத்த மருமகள்
மல்லிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

பாட்டி என்றழைத்தவுடன்
பண்புடனே வந்திடுவீர்
பேரப்பிள்ளைகளைக் கண்டவுடன்
பேரானந்தம் கொள்வீரே.

மகனைக் கண்டவுடன்
மனம் திறந்து கதைப்பீரே
மகனிடமே சென்றுவிட்டீர்
மனம் திறந்து கதைப்பதற்கா?

காலன் அவன் காவு கொண்டுவிட்டான்
காலத்தில் தவமிருந்தும் பயனில்லாமல் சென்றதேனோ?
ஆசையாய் கதைப்பதற்கு நீங்கள் இருந்தீர்
ஆவலாய் ஏங்குகின்றோம் எம்மிடம் வருவீரா என.

சிறுவயதில் எம்மைப் பார்த்தீர்
பதில் கடன் உமக்கு நாமும் செய்தோம்
பாடசாலை கூட்டிச் செல்வீர்
பண்புடனே எமை அணைத்திடுவீர்

கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தீர்
கடைசியில் தவிக்கவிட்டு சென்று விட்டீர்
பாட்டியவள் சென்றுவிட்டீர்
பேரப்பிள்ளைகள் ஏங்குகின்றோம்.

பாட்டி! பாட்டி! பாட்டி!

பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருவாட்டி தவமணிஅம்மா நாராயணசர்மா அவர்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இரங்கல் செய்தியும்

"சத்தியாய் சிவமாகி தனிப்பர
முத்தியான முதலைத் துதிசையச்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியாணை தன் செய்ய பொற்பாதமே"

சிவனே சக்தியாகவும் + சிவமாகவும் பிரிந்து நின்று முத்திப்பேறு அருளும் முதல்வனாக நிகழ்கின்றான் என்பது இதன் கருத்து.

இவர்களது குடும்பம் அன்றில் இருந்து இன்றுவரை நெடுந்தீவு நடுக்குறிச்சி கோவில் கொண்டு எழுந்தருளியி ருக்கும் பெருக்கடி ஸ்ரீ சித்திவிநாயகர் பெருமான் மீது உரிமை யுடன் நித்திய பூஜை, வருடாந்த உற்சவங்கள், விசேட தின பூஜைகளை சிறப்புடன் செய்து வருவதை நாம் பார்த்தும், கேட்டும் உணர்ந்திருக்கின்றேன். இவர் தீவகத்திலுள்ள ஏனைய மதம் சார்ந்த மக்களையும் ஆதரித்து அன்பாக விருந்தோம்பி உபசரித்து அன்புள்ளம் கொண்டவர். 2006 ஆம் ஆண்டு பெருக்கடி விநாயகருக்கு குடைமுழுக்கு செய்த வேளையில் பத்மநாதக்குருவும் + அம்மாவும் இணைந்தே அமுது செய்து பெருமானுக்கு படைத்து எங்களது குடும்பத்தையும் உபசரிப்பார். இவரது தவப்புதல்வன் பத்மநாதக் குருவின் அன்றைய மறைவும் இவருக்கு ஆறாத்துயரத்தை கொடுத்துள்ளது என்பதையும் நினைவூட்டுகின்றேன்.

இவரது பிரிவால் துயருற்றிருக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கும் என்றென்றும் பெருக்கடியானின் திவ்விய கடாட்சமும், பேரருளும் கிடைக்க வேண்டி எமது குடும்பம் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

நீர் பூத்த கடல் புடை சூழ்
நெடுந்தீவிற் சீர்
நிறை பூத்த பெருக்கடியில் நிறைந்துவளும்
ஏர் பூத்த மறை நான்கின் முதலுமாகி
எழில் பூத்த இறுதியுமாம் – எல்லாமான
கார்பூத்த கதட விதட கும்பக்
கணபதியே உனது பெரும் கருணை போற்றி.

சுப்பிரமணியம் தியாகலிங்கம் தலைவர்,
பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்!
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

ஓங்கி உலகளந்த ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெறும்செந் நெல்ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிமழைக் கண்ணா ஒன்று நீகை கரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல்மெய் கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பனாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்.

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்.

கீசுகீசு என்று எங்கும் ஆனைச்சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து
வாசநறும் குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீகேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
வான் போகின்றாரைப் போகாமல்காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலம் உடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாயாய்.

தூமணி மாடத்து சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக் கதவம் தாழ்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ?ழ உன்மகள்தான்
ஊமையோ? அன்றி செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டுஒருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றம் ஒன்றில்லாத கோவலர்த்தம் பொற்கொடியே!
புற்றுஅரவு அல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்து தோழிமார் எல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வ பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால்சோர
நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற்கடை பற்றிச்
சினத்தினால் தென்இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும்நீ வாய் திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேர்உறக்கம்!
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோர்எம்பாவாய்.

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன் நாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம்பாவாய்.

உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக் கூரை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்.

எல்லே! இளம்கிளியே இன்னம் உறங்குதியோ?
சில்என்று அழையேன்மின் நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாய்அறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தான்ஆயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும்போந்தாரோ? போந்தார்போந்து எண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகனாய் நின்ற நந்தகோபன் உடைய
கோயில் காப்பானே! கொடி தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயில்எழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோர் எம்பாவாய்.

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குல விளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பரம் ஊடறுத்து ஓங்கி உளகளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோர் எம்பாவாய்.

உந்துமத களிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலி! கடைதிறவாய்
வந்துஎங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

குத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பினை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்றற் கில்லாயால்
தத்துவம் அன்று தகவேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலையே! துயிலெழாய்
செப்பம் உடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பென்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம்பாவாய்.

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாது வந்துஉன் அடிபணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம்பாவாய்.

அங்கண்மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக் கட்டிற்கீழே
சங்கம் இருப்பார்போல் வந்து தலைப் பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச் சிறிலே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்.

மாரி முலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்று தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாப் போலேநீ பூவைப் பூவண்ணா! உன்
கோயில்நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரியசிங்கா சனத்திருந்த யாம் வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிவ்வுலகமளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச்சகட முடைத்தாய்! புகழ் போற்றி
கன்று குணிலாவெறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையாவெடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்று உன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கில னாகித் தான் தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்த கஞ்சன் வயிற்றில்
நெருப்பென நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும்யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலினிலையாய்! அருளேலோர் எம்பாவாய்.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடுபுகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்குலத்து உன்தன்னை
பிறவிப் பெருந்துணை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னை சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்து சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவை
பைங்கமலத்தண்தெரியல்பட்டர்பிரான்கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத் தோள்
செங்கண் திருமுகத்து செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய்.

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையில் அருளிய

# திருப்பொற்சுண்ணம்

## ஆனந்த மனோலயம்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

01. முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

02. பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

03. சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற் (கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

05. அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறுவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

06. உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

07. சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக் (கு)
ஆடக மாலை அன்னகோவுக் (கு)
ஆடப் பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

09. வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

10. முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

11. மாடு நகைவாள் நிலா வெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக் (கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

13. மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென் மொழியீர்
என்னுடைய ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெருமான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

14. சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய் இதழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

15. ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

17. தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

18. அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

19. வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்(கு)
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்து நாமே.

திருச்சிற்றம்பலம்

****

## சிந்திக்கச் சிலவரிகள்

- நியாயத்தைக் கடைப்பிடிப்பவன் பொறாமையின் மத்தியிலும் முன்னேறுவான்.
- பலமுள்ளவனாக இருக்கவிரும்பினால் உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்துகொள்.
- நாக்கு கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்.
- தொழில் எத்தனை கீழ்த்தரமாயினும் அவமானமில்லை.
- பிறரிடத்தில் இருந்து நீ என்ன எதிர்பார்க்கிறாயோ அதையே நீ பிறருக்குக்கொடு.
- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டே இருப்பதைவிடுங்கள்.
- மிகவிரைவாக நண்பர்களைப் பெற்றுக்கொண்டே போகிறவன் அதிவிரைவாக நண்பர்களை இழந்து கொண்டே வருவான்.
- நாம் எங்கே அதிகம் நம்பிக்கை வைக்கிறோமோ அங்கே நமக்காகப் பல ஏமாற்றங்களும் காத்திருக்கும்.
- இறைவன் உங்கள் செயல்களைக் கவனித்து உங்கள் எதிர்காலத்தை இரகசியமாக எழுதுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

தோற்றம்
-
29
-
08
-
1931



மறைவு
-
30
-
01
-
2017

எமது சிவனடியார் தொண்டர் மடாலய தலைவரும், பன்னாலை வரத்தலை கற்பக விநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா மகேந்திரசர்மா அவர்களின் அன்பு மனைவியும், பன்னாலை வரத்தலை கற்பக விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்களுக்கு அவர்களின் அன்பு மாமியாரும்

## அமரர் நாராயணசர்மா தவமணிஅம்மா

பார் புகழும் புனித
மண்ணில் பிறந்தவரே
அன்பிற்கு இலக்கணமாகவும்
பண்பின் சிகரமாய் திகழ்ந்தீரே
அம்மா உங்கள் பிரிவு கண்டு
எல்லோரும் விம்மியழ
உறவுகள் புரண்டு அழ
ஊரோ உங்கள் பிரிவு கண்டு
வேதனை அடைய நாம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாகசபை
சிவனடியார் தொண்டர் மடாலயம்
பன்னாலை தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

29
-
08
-
1931



இறப்பு

30
-
01
-
2017

பண்ணாகலை வரத்தலம் கற்கவிநாயகர் ஆலய ஆதீனகர்த்தா ம.மகேந்திரசர்மா,
பிரதமகுரு சிவஸ்ரீ சதா சுகுமாரக்குருக்கள் ஆகியோரின் பாசமிகு மாமியார்

## அமரர் நாராயணசர்மா தவமணி அம்மா

சிந்தையிலே இனித்திருக்கும்
சிரித்த முகம் எங்கே
சிந்திக்க வைத்துவிடும்
சிறந்த பேச்செங்கே
சொந்தமொடு பந்தமென்று
சேரும் நட்பெங்கே
அந்தகன் வந்தும்மை
அணைத்த செய்தி கேட்டு
நொந்தெழுந்து புலம்புகின்றோம்
வேதனையில் வாடுகின்றோம்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்,
பண்ணாகலை வாழ் மக்கள்

பண்ணாகலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அன்னை மறைவு: 29 - 08 - 1931
ஆண்டவன் மறைவு: 30 - 01 - 2017

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் தவமணி அம்மா நாராயணசர்மா
### (சித்தர்ஐயா)

**அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.**

நாராயண சர்மா எனும் நாமம் கொண்ட
சித்தர் ஐயாவை தரணியில் சிறப்புற
வாழ்விக்க வந்த - வாழவைத்த தெய்வமே
அன்னையில் அமரத்துவம் அடைந்த அமரர்
பத்மநாதன் அவர்களும் - எம்மோரும்
சந்தனம் போல் குளிர்மையான
சொற்களையே பேசும் சந்தான இலட்சுமியினதும்
வளமிக்க வாழ்வு தரும் நாமம் கொண்ட
வர இலட்சுமியினதும், வளமான வாழ்விற்கு
வழிகாட்டியாக விளங்கிய விழி விளக்கே,
மனம் கோணாது - சலித்திடாது
மதுகாந்தியையும் மனோஜினியையும் மாண்பு மிகுகணவர்
கொண்ட மகேந்திர சர்மாவையும் மருமகனாகவும்
மல்லிகை போல் மனம் கமழ்ந்திடும்
மல்லிகா தேவியை மருமகளாகவும், அவர்களையும்
அவர்கள் பிள்ளைகளான - தங்கள்
பேரப்பிள்ளைகளையும் பரிதவிக்கவிட்டு எங்கு
சென்றீர்கள், ஏன் சென்றீர்கள்? தங்கள் பிரிவால்
வாடும் அவர்களை தேற்ற யார் உள்ளனர்?
காலம் தான் அவர்களை மாற்ற வேண்டும்
ஆற்ற வேண்டும்.

ஆனைக்கோட்டை.

தேவஸ்தானம்,
கரைப்பிறாய் பிள்ளையார் கோவில்

T.P 021 225 5566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்


- * குப்பாசாமி ஐயர் + அன்னம்மா
  - * காசிலிங்க ஐயர்
  - இரத்தினக்குருக்கள்
  - **தவமணி அம்மா** + * நாராயணசர்மா
    - பத்மநாதக்குருக்கள் + மல்லிகாராணி
      - வைத்தீஸ்வரன்
      - சர்வேஸ்வரன்
    - சந்தானலக்ஷ்மி + சுகுமாரக்குருக்கள்
      - கானப்பிரியா
      - நித்தியானந்தி
      - குஹப்பிரியன்
      - சுபாசினி
      - கஜனிகா
    - வரலக்ஷ்மி + மகேந்திரசர்மா
      - லக்ஷ்மிநாராயணன்
      - சஞ்சுதன்

*** அமரர்களைக் குறிக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

இறையடி எய்திய எமது அன்புத் தெய்வம் **அமரர் ஸ்ரீமதி நாராயணசர்மா தவமணி அம்மா** அவர்களின் பேரிழப்பால் நாம் துயருற்றி ருந்த வேளையில் உற்றதுணையாய் நின்று உதவி கள் பலபுரிந்தும், இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றி நேரடியாக ஆறுதல் கூறியும், தொலைபேசி, கடிதங்கள் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தும் பல்வேறு வகைகளில் உதவியும், ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பவற்றில் கலந்து கொண்டு சிறப்பித்த உங்கள் அனைவ ருக்கும் மற்றும் இந் நினைவு மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தி னருக்கும் எம் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org